ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருமாலை ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ திருமாலை ॥

## திருவரங்கப்பெருமால் அரையர் அருளிச்செய்த தனியன்

மற்றொன்றும் வேண்டா மனமே! மதிளரங்கர்⋆
    கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்⋆ உற்ற
திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப் பொடி எம்
    பெருமானை⋆ எப்பொழுதும் பேசு

‡காவலில் புலனை வைத்துக்⋆ கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து⋆
    நாவலிட்டுழி தருகின்றோம்⋆ நமன் தமர் தலைகள் மீதே⋆
மூவுலகுண்டுமிழ்ந்த⋆ முதல்வ! நின் நாமம் கற்ற⋆
    ஆவலிப் புடைமை கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (1)

‡பச்சை மா மலை போல் மேனி⋆ பவளவாய் கமலச் செங்கண்⋆
    அச்சுதா! அமரர் ஏறே!⋆ ஆயர் தம் கொழுந்தே! என்னும்⋆
இச்சுவை தவிர யான் போய்⋆ இந்திர லோகம் ஆளும்⋆
    அச்சுவை பெறினும் வேண்டேன்⋆ அரங்க மா நகருளானே! (2)

வேத நூல் பிராயம் நூறு⋆ மனிசர் தாம் புகுவரேலும்⋆
    பாதியும் உறங்கிப் போகும்⋆ நின்றதில் பதினையாண்டு⋆
பேதை பாலகன் அதாகும்⋆ பிணி பசி மூப்புத் துன்பம்⋆
    ஆதலால் பிறவி வேண்டேன்⋆ அரங்க மா நகருளானே! (3)

மொய்த்த வல்வினையுள் நின்று⋆ மூன்றெழுத்துடைய பேரால்⋆
    கத்திர பந்தும் அன்றே⋆ பராங்கதி கண்டு கொண்டான்⋆
இத்தனை அடியர் ஆனார்க்கு⋆ இரங்கும் நம் அரங்கனாய⋆
    பித்தனைப் பெற்றும் அந்தோ!⋆ பிறவியுள் பிணங்குமாறே! (4)

பெண்டிரால் சுகங்கள் உய்ப்பான்⋆
    பெரியதோர் இடும்பை பூண்டு⋆
உண்டிராக் கிடக்கும் போது⋆
    உடலுக்கே கரைந்து நைந்து⋆

தண் துழாய் மாலை மார்பன்⋆
    தமர்களாய்ப் பாடி ஆடி⋆
தொண்டு பூண்டமுதம் உண்ணாத்⋆
    தொழும்பர் சோறுகக்குமாறே! (5)

மறம்சுவர் மதிளெடுத்து⋆ மறுமைக்கே வெறுமை பூண்டு⋆
    புறம்சுவர் ஓட்டை மாடம்⋆ புரளும் போதறிய மாட்டீர்⋆
அறம்சுவர் ஆகி நின்ற⋆ அரங்கனார்க்காட் செய்யாதே⋆
    புறம்சுவர்க் கோலஞ்செய்து⋆ புள் கவ்வக் கிடக்கின்றீரே! (6)

புலை அறம் ஆகி நின்ற⋆ புத்தொடு சமணம் எல்லாம்⋆
    கலை அறக்கற்ற மாந்தர்⋆ காண்பரோ கேட்பரோ தாம்⋆
தலை அறுப்புண்டும் சாவேன்⋆ சத்தியம் காண்மின் ஐயா⋆
    சிலையினால் இலங்கை செற்ற⋆ தேவனே தேவன் ஆவான் (7)

வெறுப்பொடு சமணர் முண்டர்⋆ விதி இல் சாக்கியர்கள் நின்பால்⋆
    பொறுப்பரியன கள் பேசில்⋆ போவதே நோயதாகி⋆
குறிப்பெனக்கடையும் ஆகில்⋆ கூடுமேல் தலையை ஆங்கே⋆
    அறுப்பதே கருமம் கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (8)

மற்றும் ஓர் தெய்வம் உண்டே⋆ மதியிலா மானிடங்காள்⋆
    உற்றபோதன்றி நீங்கள்⋆ ஒருவன் என்றுணர மாட்டீர்⋆
அற்றமேல் ஒன்றறீயீர்⋆ அவன் அல்லால் தெய்வம் இல்லை⋆
    கற்றினம் மேய்த்த எந்தை⋆ கழலிணை பணிமினீரே (9)

நாட்டினான் தெய்வம் எங்கும்⋆ நல்லதோர் அருள் தன்னாலே⋆
    காட்டினான் திருவரங்கம்⋆ உய்பவர்க்குய்யும் வண்ணம்⋆
கேட்டிரே நம்பிமீர்காள்!⋆ கெருடவா கனனும் நிற்கச்⋆
    சேட்டைதன் மடியகத்துச்⋆ செல்வம் பார்த்திருக்கின்றீரே (10)

ஒரு வில்லால் ஓங்கு முந்நீர்⋆ அனைத்துலகங்கள் உய்யச்⋆
    செருவிலே அரக்கர் கோனைச்⋆ செற்ற நம் சேவகனார்⋆
மருவிய பெரிய கோயில்⋆ மதில் திருவரங்கம் என்னா⋆
    கருவிலே திருவிலாதீர்!⋆ காலத்தைக் கழிக்கின்றீரே (11)

நமனும் முற்கலனும் பேச⋆ நரகில் நின்றார்கள் கேட்க⋆
நரகமே சுவர்க்கம் ஆகும்⋆ நாமங்கள் உடைய நம்பி⋆
அவனதூர் அரங்கம் என்னாது⋆ அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்⋆
கவலையுள் படுகின்றார்⋆ என்றதனுக்கே கவல்கின்றேனே! (12)

எறியும் நீர் வெறிகொள் வேலை⋆ மாநிலத்துயிர்கள் எல்லாம்⋆
வெறிகொள் பூந்துளவ மாலை⋆ விண்ணவர்கோனை ஏத்த⋆
அறிவிலா மனிசர் எல்லாம்⋆ அரங்கம் என்றழைப்பராகில்⋆
பொறியில் வாழ் நரகம் எல்லாம்⋆ புல் எழுந்தொழியும் அன்றே (13)

‡வண்டினமுரலும் சோலை⋆ மயிலினம் ஆலும் சோலை⋆
கொண்டல் மீதணவும் சோலை⋆ குயிலினம் கூவும் சோலை⋆
அண்டர்கோன் அமரும் சோலை⋆ அணி திருவரங்கம் என்னா⋆
மிண்டர்பாய்ந்துண்ணும் சோற்றை⋆ விலக்கி நாய்க்கிடுமினீரே (14)

மெய்யர்க்கே மெய்யன் ஆகும்⋆ விதி இலா என்னைப் போல⋆
பொய்யர்க்கே பொய்யன் ஆகும்⋆ புட்கொடி உடைய கோமான்⋆
உய்யப்போம் உணர்வினார்கட்கு⋆ ஒருவன் என்றுணர்ந்த பின்னை⋆
ஐயப்பாடறுத்துத் தோன்றும்⋆ அழகன் ஊர் அரங்கம் அன்றே (15)

சூதனாய்க் கள்வனாகித்⋆ தூர்த்தரோடிசைந்த காலம்⋆
மாதரார் கயற்கண் என்னும்⋆ வலையுள் பட்டழுந்து வேனைப்⋆
போதரே என்று சொல்லிப்⋆ புந்தியில் புகுந்து தன்பால்⋆
ஆதரம் பெருக வைத்த⋆ அழகன் ஊர் அரங்கம் அன்றே (16)

விரும்பி நின்றேத்த மாட்டேன்⋆ விதியிலேன் மதி ஒன்றில்லை⋆
இரும்பு போல் வலிய நெஞ்சம்⋆ இறையிறை உருகும் வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த⋆ அரங்க மா கோயில் கொண்ட⋆
கரும்பினைக் கண்டு கொண்டென்⋆ கண்ணிணை களிக்குமாறே! (17)

இனி திரைத் திவலை மோத⋆ எறியும் தண் பரவை மீதே⋆
தனி கிடந்தரசு செய்யும்⋆ தாமரைக் கண்ணன் எம்மான்⋆
கனி இருந்தனைய செவ்வாய்க்⋆ கண்ணனைக் கண்ட கண்கள்⋆
பனியரும்புதிரு மாலோ⋆ என் செய்கேன் பாவி யேனே! (18)

‡குடதிசை முடியை வைத்துக்⋆ குணதிசை பாதம் நீட்டி⋆
வடதிசை பின்பு காட்டித்⋆ தென் திசை இலங்கை நோக்கி⋆
கடல் நிறக்கடவுள் எந்தை⋆ அரவணைத் துயிலுமா கண்டு⋆
உடல் எனக்குருகுமாலோ⋆ என் செய்கேன் உலகத்தீரே! (19)

பாயும் நீர் அரங்கந் தன்னுள்⋆ பாம்பணைப் பள்ளி கொண்ட⋆
மாயனார் திரு நன் மார்பும்⋆ மரகத உருவும் தோளும்⋆
தூய தாமரைக் கண்களும்⋆ துவர் இதழ்ப் பவள வாயும்⋆
ஆய சீர் முடியும் தேசும்⋆ அடியரோர்க்ககலலாமே (20)

பணிவினால் மனமதொன்றிப்⋆ பவள வாய் அரங்கனார்க்குத்⋆
துணிவினால் வாழ மாட்டாத்⋆ தொல்லை நெஞ்சே! நீ சொல்லாய்⋆
அணியன் ஆர் செம்பொன் ஆய⋆ அருவரை அனைய கோயில்⋆
மணியனார் கிடந்த வாற்றை⋆ மனத்தினால் நினைக்கலாமே (21)

பேசிற்றே பேசல் அல்லால்⋆ பெருமை ஒன்றுணரல் ஆகாது⋆
ஆசற்றார் தங்கட்கல்லால்⋆ அறியல் ஆவானும் அல்லன்⋆
மாசற்றார் மனத்துளானை⋆ வணங்கி நாம் இருப்பதல்லால்⋆
பேசத்தான் ஆவதுண்டோ⋆ பேதை நெஞ்சே! நீ சொல்லாய் (22)

கங்கையில் புனிதம் ஆய⋆ காவிரி நடுவு பாட்டு⋆
பொங்குநீர் பரந்து பாயும்⋆ பூம்பொழில் அரங்கந் தன்னுள்⋆
எங்கள் மால் இறைவன் ஈசன்⋆ கிடந்ததோர் கிடக்கை கண்டும்⋆
எங்ஙனம் மறந்து வாழ்கேன்⋆ ஏழையேன் ஏழையேனே! (23)

வெள்ள நீர் பரந்து பாயும்⋆ விரி பொழில் அரங்கந் தன்னுள்⋆
கள்வனார் கிடந்த வாறும்⋆ கமல நன் முகமும் கண்டு⋆
உள்ளமே! வலியை போலும்⋆ ஒருவன் என்றுணர மாட்டாய்⋆
கள்ளமே காதல் செய்துன்⋆ கள்ளத்தே கழிக்கின்றாயே! (24)

குளித்து மூன்றனலை ஓம்பும்⋆ குறிகொள் அந்தண மைதன்னை⋆
ஒளித்திட்டேன் என் கண் இல்லை⋆ நின் கணும் பத்தன் அல்லேன்⋆
களிப்பதென் கொண்டு நம்பீ!⋆ கடல்வண்ணா! கதறுகின்றேன்⋆
அளித்தெனக்கருள் செய் கண்டாய்⋆ அரங்க மா நகருளானே! (25)

போதெல்லாம் போது கொண்டுன்⋆ பொன்னடி புனைய மாட்டேன்⋆
    தீதிலா மொழிகள் கொண்டுன்⋆ திருக்குணம் செப்ப மாட்டேன்⋆
காதலால் நெஞ்சம் அன்பு⋆ கலந்திலேன் அது தன்னாலே⋆
    ஏதிலேன் அரங்கர்க்கெல்லே!⋆ என் செய்வான் தோன்றினேனே! (26)

குரங்குகள் மலையை நூக்கக்⋆ குளித்துத் தாம் புரண்டிட்டோடி⋆
    தரங்க நீர் அடைக்கல் உற்ற⋆ சலம் இலா அணிலம் போலேன்⋆
மரங்கள் போல் வலிய நெஞ்சம்⋆ வஞ்சனேன் நெஞ்சு தன்னால்⋆
    அரங்கனார்க்காட் செய்யாதே⋆ அளியத்தேன் அயர்க்கின்றேனே! (27)

உம்பரால் அறியல் ஆகா⋆ ஒளியுளார் ஆனைக்காகி⋆
    செம் புலால் உண்டு வாழும்⋆ முதலை மேல் சீறி வந்தார்⋆
நம் பரம் ஆயதுண்டே⋆ நாய்களோம் சிறுமை ஓரா⋆
    எம்பிராற்காட் செய்யாதே⋆ என் செய்வான் தோன்றினேனே! (28)

ஊரிலேன் காணி இல்லை⋆ உறவு மற்றொருவர் இல்லை⋆
    பாரில் நின் பாத மூலம்⋆ பற்றிலேன் பரம மூர்த்தி⋆
காரொளி வண்ணனே! என்⋆ கண்ணனே! கதறுகின்றேன்⋆
    ஆர் உளர் களைகண் அம்மா!⋆ அரங்க மா நகருளானே! (29)

மனத்தில் ஓர் தூய்மை இல்லை⋆ வாயில் ஓர் இன்சொல் இல்லை⋆
    சினத்தினால் செற்றம் நோக்கித்⋆ தீவிளி விளிவன் வாளா⋆
புனத்துழாய் மாலையானே!⋆ பொன்னி சூழ் திருவரங்கா⋆
    எனக்கினிக் கதி என் சொல்லாய்⋆ என்னை ஆளுடைய கோவே! (30)

தவத்துளார் தம்மில் அல்லேன்⋆ தனம் படைத்தாரில் அல்லேன்⋆
    உவர்த்த நீர் போல என்தன்⋆ உற்றவர்க்கொன்றும் அல்லேன்⋆
துவர்த்த செவ்வாயினார்க்கே⋆ துவக்கறத் துரிசன் ஆனேன்⋆
    அவத்தமே பிறவி தந்தாய்⋆ அரங்க மா நகருளானே! (31)

ஆர்த்து வண்டலம்பும் சோலை⋆ அணி திருவரங்கந் தன்னுள்⋆
    கார்த் திரள் அனைய மேனிக்⋆ கண்ணனே! உன்னைக் காணும்⋆
மார்க்கம் ஒன்றுமறியமாட்டா⋆ மனிசரில் துரிசனாய⋆
    மூர்க்கனேன் வந்துநின்றேன்⋆ மூர்க்கனேன் மூர்க்கனேனே (32)

மெய் எல்லாம் போக விட்டு⋆ விரிகுழலாரில் பட்டு⋆
    பொய் எலாம் பொதிந்து கொண்ட⋆ போட்கனேன் வந்து நின்றேன்⋆
ஐயனே! அரங்கனே! உன்⋆ அருள் என்னும் ஆசை தன்னால்⋆
    பொய்யனேன் வந்து நின்றேன்⋆ பொய்யனேன் பொய்யனேனே (33)

உள்ளத்தே உறையும் மாலை⋆
    உள்ளுவான் உணர்வொன்றில்லாக்⋆
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்⋆
    தொண்டுக்கே கோலம் பூண்டேன்⋆
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம்⋆
    உடன் இருந்தறிதி என்று⋆
வெள்கிப்போய் என்னுள்ளே நான்⋆
    விலவறச் சிரித்திட்டேனே! (34)

தாவி அன்றுலகம் எல்லாம்⋆ தலைவிளாக்கொண்ட எந்தாய்⋆
    சேவியேன் உன்னை அல்லால்⋆ சிக்கெனச் செங்கண் மாலே⋆
ஆவியே! அமுதே என் தன்⋆ ஆருயிர் அனைய எந்தாய்⋆
    பாவியேன் உன்னை அல்லால்⋆ பாவியேன் பாவியேனே (35)

மழைக்கன்று வரை முன் ஏந்தும்⋆ மைந்தனே! மதுர ஆறே⋆
    உழைக்கன்றே போல நோக்கம்⋆ உடையவர் வலையுள் பட்டு⋆
உழைக்கின்றேற்கென்னை நோக்காது⋆ ஒழிவதே உன்னை அன்றே⋆
    அழைக்கின்றேன் ஆதி மூர்த்தி!⋆ அரங்க மா நகருளானே! (36)

தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ்⋆ திருவரங்கத்துள் ஓங்கும்⋆
    ஒளியுளார் தாமே யன்றே⋆ தந்தையும் தாயும் ஆவார்⋆
எளியதோர் அருளும் அன்றே⋆ என் திறத்தெம்பிரானார்⋆
    அளியன் நம் பையல் என்னார்⋆ அம்மவோ! கொடியவாறே! (37)

‡மேம்பொருள் போக விட்டு⋆ மெய்ம்மையை மிக உணர்ந்து⋆
    ஆம்பரிசறிந்து கொண்டு⋆ ஐம்புலன் அகத்தடக்கி⋆
காம்புறத்தலை சிரைத்துன்⋆ கடைத்தலை இருந்து வாழும்⋆
    சோம்பரை உகத்தி போலும்⋆ சூழ் புனல் அரங்கத்தானே! (38)

அடிமையில் குடிமை இல்லா⋆ அயல் சதுப்பேதி மாரில்⋆
குடிமையில் கடைமை பட்ட⋆ குக்கரில் பிறப்பரேலும்⋆
முடியினில் துளபம் வைத்தாய்!⋆ மொய் கழற்கன்பு செய்யும்⋆
அடியரை உகத்தி போலும்⋆ அரங்க மா நகருளானே! (39)

திருமறுமார்வ! நின்னைச்⋆ சிந்தையுள் திகழ வைத்து⋆
மருவிய மனத்தர் ஆகில்⋆ மா நிலத்துயிர்கள் எல்லாம்⋆
வெருவுறக்கொன்று சுட்டிட்டு⋆ ஈட்டிய வினையரேலும்⋆
அருவினைப் பயன துய்யார்⋆ அரங்க மா நகருளானே! (40)

வானுளார் அறியல் ஆகா⋆ வானவா! என்பர் ஆகில்⋆
தேனுலாம் துளப மாலைச்⋆ சென்னியாய்! என்பர் ஆகில்⋆
ஊனம் ஆயினகள் செய்யும்⋆ ஊனகாரகர்களேலும்⋆
போனகம் செய்த சேடம்⋆ தருவரேல் புனிதம் அன்றே (41)

பழுதிலா வொழுகல் ஆற்றுப்⋆ பல சதுப்பேதி மார்கள்⋆
இழிகுலத்தவர்களேலும்⋆ எம் அடியார்கள் ஆகில்⋆
தொழுமினீர் கொடுமின் கொள்மின்!⋆ என்று நின்னோடும் ஒக்க⋆
வழிபட அருளினாய் போல்⋆ மதிள் திருவரங்கத்தானே! (42)

அமர ஓர் அங்கம் ஆறும்⋆ வேதம் ஓர் நான்கும் ஓதித்⋆
தமர்களில் தலைவராய⋆ சாதி அந்தணர்களேலும்⋆
நுமர்களைப் பழிப்பர் ஆகில்⋆ நொடிப்பதோர் அளவில் ஆங்கே
அவர்கள் தாம் புலையர் போலும்⋆ அரங்க மா நகருளானே! (43)

‡பெண் உலாம் சடையினானும்⋆ பிரமனும் உன்னைக் காண்பான்⋆
எண் இலா ஊழி ஊழி⋆ தவம் செய்தார் வெள்கி நிற்ப⋆
விண் உளார் வியப்ப வந்து⋆ ஆனைக்கன்றருளை ஈந்த⋆
கண்ணறா! உன்னை என்னோ⋆ களைகணாக் கருதுமாறே! (44)

‡வளவெழும் தவள மாட⋆ மதுரை மா நகரந் தன்னுள்⋆
கவளமால் யானை கொன்ற⋆ கண்ணனை அரங்க மாலை⋆
துளவத் தொண்டாய தொல் சீர்த்⋆ தொண்டரடிப்பொடி சொல்⋆
இளையபுன் கவிதையேலும்⋆ எம்பிறார்கினிய வாறே! (45)

॥ தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம் ॥